அசல்

22.3.40. இ. கந்தசாமி.

அசல் - 1 நகல்.

உ
சிவமயம்

துன்னாலை வடக்கு.
பருத்தித்துறை
இலங்கை
22-3-40.

Replied
27.3.40.

மகாமகோபாத்தியாய தக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் பிரம்மஸ்ரீ உ.வே. சாமிநாத ஐயரவர்களின் திவ்விய சந்நிதிக்கு.

ஐய!

தங்கள் சரீரநிலை குறித்த விடயங்களைக் கேட்டதும் மனம்வருந்தினேன் எனினும், தற்போதைய நிலையைக் கேட்டு மகிழ்வுறுகின்றனன். தங்களது 86வது பிறந்ததின வைபவத்திற்காக இத்துடன் சில பாக்களியற்றி அனுப்புகின்றனன். அவற்றை யன் பாயேற்கு மாறு பணிகின்றனன்

இங்ஙனம்
தங்கள் அன்புள்ள
இ. கந்தசாமி.

R. Kandasamy.
Teacher
Thunnalai North
Point Pedro.

No. 46(a) 15.12.70
Page 158-59.

208

அசல்

22.3.40. இ. கந்தசாமி.

அசல் -1 நகல்

No. 46(b)

p. 159-162

தமிழர் தவக்கொழுந்துக்கு

## வாழ்த்து S.R.K.

I. தமிழணங் கெற்றி யீன்ற தவக்கொழுந் தெந்த நாளும்
கெழுக முடைய னென்னைக் கேண்புரி நூலார் நெஞ்சன்
அமுதுமிழ் தமிழைப் பண்டை யரியணை யேற்று வீரன்
சமநிலை தவறுச் சாமி நாதையன் றாளைப் போற்றே.

II. பூமலி கொன்றை பொங்கர விளம்பிறை
சீர்மலி சடைமுடி நீத்தழ கெழுக்கு
வேம்பது மிலைந்து வெள்ளை யகற்றி
வடாஅது பணிபடு நெடுவரை நிலைஇய
அடாஅச் செயலெழில் யம்மீன் விலோதனம்
உடையரிப் பாம்பணி யொழித்து நயமணி
கயலெனப் பிறழும் கண்ணி னோடு
பாண்டியர் தம்முடி பகர்கல னணிந்து
ஆண்டகைத் தொழிலது விட்டர சாண்டோன்
ஆடகக் கிடுமி மாட மதுரையில்
மாடக யாழின் மழலை விளிக்கு
மென்றே யாய்ந்த வெழிற்றமிழ் ழண்ணைக்
கிளமையிற், றுறந்த விளங்கோ வேந்தன்
வணிகச் செய்தனி மன்சிலம் பதுவும்
சங்கச் சான்றின் சாத்த னணிந்த
பொங்கொளி மேகலை புகல்சில காழும்
புதுக்கி யணிந்த புனித வந்தண!
கொங்குவேண் மாக்கதை யருந்தொகை யதும்
இங்கிதை நற்றிணை யீய்ந்தநற் றிணையோய்! -
பரிபாட் டென்னும் பரியதைப் பண்ணமைத்
துரியவ ளாந்தமிழ்க் குதவிய சீரோய்!
புறப்பாட் டாதுபுறப் பாட்டா காது
சிறப்பட வளித்த செம்மால்! நின்னை
பதிற்றுப் பத்தைப் பதித்தவ! நின்னை
புலக்கண மிக்க விலக்கண நூல்களும்
இலக்கிய நூல்களு மெத்தனை யளித்தனை

அசல்

22.3.40. இ. கந்தசாமி.

அசல் - 1 நகல்

பீடுட்டி சுந்தர வியன்கவி மாட்டுத்
நாடுட்டி யாகக் கற்றவ! வலநூல்
கொண்டுநெமக் களித்த கொற்றவ! நின்னை
புணர்ந்திடு மகம்புறம் புணர்ந்தவ! நின்னை
முந்து நால் மாரபின் முதுமறை யந்தண!
முந்நூற் பகுப்பு முழுதறி புலவ!
நின்னிற் றமிழு நிலவிடு தமிழும்
மன்னி தனவு மன்னின ரைய
தமிழர் தமக்கோர் நாவில் விளக்கே
பல்லாண்டு வாழ்க வாழ்க பல்லாண்டு
நல்லா ணிழலமர் கன்றுமான் கொத்தன்
நின்னருள் தழைக்கத் தழைக்க வதன்று
நின்னடு மக்களு நீடுக வதான்று
மற்றவர் தமிழ்க்கலை மன்னுக நினைப்போல்
கற்றவர் மற்றவர் யாவரு மிக்க
நின்போ லவரு நிலவுபன் நூல
என்போல் வாழுக் கினிது மளிக்க
உலகினிற் றில்போ லதுக்கிடு பெரியதில்
நிலவிடு மெய்க நிறைதவக் கொழுந்தே!
நிலவிடு மெய்க நிறைதவக் கொழுந்தே!!
மார்க்கண் டனைப்போன் மறவியைக் கடந்தே
கார்க்கண் டாடு கலவ மயில் போற்
தமிழக மகிழத் தண்மணல் வைகை
யதனினும் கரக வாகநின் வாழ்வு
புலம்புரி சுற்றம் பொருளொடு பொலிந்தகல்
நலம்புரி கொள்கை நாவ லந்தண
நீயுதித் திலையேல் நிகழ்வது முண்டோ?
உத்தம நான மாமுயர் கலைநூல்
சித்தல பேலர்க் கேலி யிலோ?
உத்தம ஞானி யுறைந்திட லாலோ?
உத்தம நான புலமுன் ஆர்தரன்
பித்தர் போலப் பேதைமை யாலே

அசல்

22.3.40. இ. கந்தசாமி.

அசல் – 1 நகல்.

அந்தவுன் அன்புகழ் அடங்கா தென்றே
அறியேன் கூற வாதாங் கொண்டேன்
சிறியே னெவற் செப்பிட முடியா
தென்றே யிப்போ தெளிந் துணர்ந்தேன்
இன்றே யனைய இணையிலி புலவ!
வாழிய வாழிய பல்லூழும் வாழிய
ஊழிதொ றூழி யுலகுயற் பொருட்டே,

அசல்

22.3.40. இ. கந்தசாமி.

அசல் – 1 நகல்

1 20 (41)

22.3.40

(7)

No. 46

15.12.70

Pages 158 – 162

தமிழ்க்கருவூலம்